**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.116/2023 D.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுரேஷ் | த–பெ | சொக்கலிங்கம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 45/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி பேரராசிரியர், அழகப்பா பல்கலைகழகம். | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2025**
---------------------------------------------------------------------------------------

**02.04.2025**
**முதல் விசாரணை**

**1) 2021 டிசம்பர் வரை கதவு எண் 1/268 A, பொன்நகர், அழகப்பாபுரம் முகவரியில் வசித்தற்கான ஆவணம் ஆதார் அட்டை எ.சா.ஆ. 1 ஆகும். 22 ஜனவரி மாத்தில் இருந்து க.எண். 35/1, பாரதி நகர் 6 வது வீதி, அழகப்பாபுரம், காரைக்குடியில் வசித்து வருவதற்கான வீட்டு வாடகை ஒப்பந்தப்பத்திரத்தின் நகல் (அசலுடன் ஒப்பீட செய்யப்பட்டது) எ.சா.ஆ. 2 ஆகும். எனக்கு 90 சதவீதம் கண்பார்வை குறைபாடு உள்ளது என்பதற்கான மாற்றுதிறனாளி அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது எ.சாஆ. 3 ஆகும்.** எனக்கு கண்பார்வை குறைபாடு உள்ளதால் மற்றவர்களின் உதவி இன்றி என்னால் எழுதப்படிக்க முடியாது. புதிதாக செல்லும் இ டத்திற்கு ஆட்கள் உதவியின்றி என்னால் செல்ல முடியாது. ஏற்கனவே சென்ற இடங்களுக்கு ஓரளவிற்கு சென்று வர முடியும்.

2) புகார்தாரரின் கணவர் எனக்கு நெடுநாள் பழக்கம் அவரது பெயர் செபஸ்டின் என்ற கென்னடி. மேற்படி நபரிடம் அவரச தேவைக்காக ரூ. 10 ஆயிரம், 20 ஆயிரம் கடன் வாங்குவேன் அதற்காக பூர்த்தி செய்யப்படாத காசோலையை கொடுத்திருந்தேன். மேற்படி நபரின் மூலம் அவரது மனைவி எனக்கு அறிமுகம் ஆனார். நான்

செபஸ்டியனுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுத்து முடித்துவிட்டேன். கடந்த 2022 மே மாதம் செபஸ்தியான் இறந்துவிட்டார். அதன் பின்னர் கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லாததால் நான் காசோலையை மீண்டும் வாங்கவில்லை. பூர்த்தி செய்யப்படாத காசோலையை புகார்தாரரே பூர்த்தி செய்து 2023ம் வருடம் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார். காசோலையில் நான் கையொப்பம் மட்டும் செய்திருந்தேன். பூர்த்தி செய்தது யார் என்பது தெரியாது.

3) வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னர் நான் புகார்தாரரிடம் சென்று கொடுக்கல் வாங்கல் எதுவும் நிலுவையில் இல்லை என்று கூறி வழக்கு காசோலையை கேட்டேன் அதற்கு புகார்தாரர் வழக்கு காசோலை வழக்கறிஞரிடம் இருப்பதாகவும் வாங்கி தருவதாக கூறினார். காசோலையை பெற்று தரவில்லை என்றால் காவல் நிலையத்தில் புகார் அளிப்பேன் என்று கூறினேன். அதனை புகார்தாரர் பொருட்படுத்தவில்லை. குறிப்பிட்ட நாட்களுக்கு பின்னர் ஜூலை மாதம் நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதன் பின்னர் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறேன். என் மனைவி பொன்நகரில் மைக்ரோ பைன்னாஸ் வைத்து நடத்தி வருவதாக கூறியிருந்தார். ஆனால் என் மனைவி அழகப்பாபுரம் குட்செட் தெருவில் ஜெராக்ஸ் கடைத்தான் நடத்தி வந்ததார். தற்போது சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரியில் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார்.

4) நான் மாதம் ரூ.1 லட்சத்திற்கு மேல் சம்பளம் வாங்குவதால் நான் கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை. **எனது சம்பள கணக்கு பட்டியல் எ.சா.ஆ. 4 ஆகும். ( புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )** புகார்தாரர் என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் இருந்து என்னை விடுதலை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி